
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1324

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

177

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த காட்டூர் கோபால் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

## காட்டூர் கோபால் கொள்கைப் பிடிப்பில் குன்றா உறுதி!

*1972-ஆம் ஆண்டு, சென்னை சிம்சன் தொழிற்சாலை தொழிற்சங்கத் தேர்தல். சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்ட அந்தத் தொழிற்சங்கத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், கோபால். கழகத்தினர், 'காட்டூர் கோபால்' என்றால் அறிவர். அவரது வெற்றியைச் சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எதிர்ப்புகளையும் மோதல்களையும் கொண்டு வந்ததுடன், கழகத்தின் தொழிற்சங்க வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளங்களையும் உருவாக்கியது. குறிப்பாக, அந்தத் தொழிற்சங்கத் தேர்தல், ஆளுங்கட்சியாக இருந்த கழகத்துக்குச் சவால்களைக் கொண்டுவந்த நிலையில், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக கலைஞர் எடுத்த எல்லா முடிவுகளுக்கும் உறுதுணையாக நின்றவர், அந்த உடன்பிறப்பு. "தொழிலாளர்களின் பிரச்சினைகளில் முன்னின்று சிறையேகிய செம்மல்" என்று கலைஞரால் போற்றப்பட்ட உடன்பிறப்பு.*

*கோயம்புத்தூர் மாவட்டம் காட்டூரில் பிறந்தவர். சிறுவயதிலேயே தந்தை பெரியாரின் சுயமரியாதை, பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர், பின்னர் கழகத்தின் தொடக்ககாலத்திலேயே முழுமையாக இணைத்துக்கொண்டார். 1960-களில் கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அன்றைய ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில் சாதிக் பாட்சா, உடுமலை நாராயணன், மதியழகன் உள்ளிட்ட முன்னோடிகளுடன் இணைந்து, அனல்பறக்கும் உரைகளால் கழகக் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச்சென்றார்.*

*காட்டூர் கோபால் அவர்களின் பணி, தொழிலாளர்களுடன் இரண்டறக் கலந்திருந்தது. பஞ்சாலைத் தொழிலாளர்களின் முன்னேற்றத்துக்காக, பேரறிஞர் அண்ணாவின் வழிகாட்டுதல்களுடன், 1960-களில் கோவை மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைக் கழகம் உருவாக்கியபோது, அதன் பொருளாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். தொழிலாளர்களோடு நெருக்கமாகப் பழகி, அவர்களின் உரிமைப் போராட்டங்களில் முன்னின்றார்.*

*கோவையில், தொழிலாளர்கள் மத்தியில் பணியாற்றிய அவரது உழைப்பு, கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை மாநில அளவில் வலுப்பெற்றபோது, அதன் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்க வைத்தது. குறிப்பாக, கழகத்தின் முதல் தொழிலாளர் அணியின் செயலாளராக இனமானப் பேராசிரியர் அன்பழகன், முதல் தலைவராக நாஞ்சிலார் ஆகியோருடன், முதல் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டவர், காட்டூர் கோபால். அந்த வகையில், தொ.மு.ச. அமைப்பைத் தமிழ்நாடு முழுவதும் வளர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்ட முன்னோடி.*

### சிம்சன் தொழிற்சங்கப் போராட்டம்

*1972-ஆம் ஆண்டு, சென்னை சிம்சன் நிறுவனத்தின் தொழிற்சங்கத் தேர்தல் காட்டூர் கோபாலின் தொழிற்சங்க வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, தொ.மு.ச. பேரவைத் தொழிற்சங்க வரலாற்றிலும் சிம்சன் தொழிற்சங்கத் தேர்தல் முக்கியமான மைல்கல் என்றே சொல்லலாம்.*

*கழகத்தின் சார்பில் போட்டியிட்ட கோபால், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், காங்கிரஸ் தலைவர்களின் தூண்டுதலின்பேரில் தொழிலாளர்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன. கழகத்தைச்*


ஓவியம் : ரவி பேலட்

*சேர்ந்த காட்டூர் கோபால், அங்கே தலைவராக இருப்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அதனால், ஒன்றியத் தொழிலாளர் நல அமைச்சகம் தலையிட்டு, அவரை நீக்க வேண்டும் என வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். "ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற முடியாமல், இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட முற்பட்டார்கள்" என அந்த நாள் நிகழ்வுகளை, 'நெஞ்சுக்கு நீதி'யில் எழுதி இருக்கிறார் கலைஞர்.*

*ஒன்றிய அரசின் ஆதரவுடன் நடைபெற்ற அந்தக் குழப்ப வேலைகள், தொழிலாளர் மத்தியில் நெருக்கடியை ஏற்படுத்திய சூழலில், 'மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டும்' என்ற கழகத் தலைமையின் முடிவை ஏற்று, முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தலைவர் பதவியிலிருந்து விலகினார். 'பதவி என்பது தனக்கானது அல்ல; கலைஞரின் முடிவும் கழகத்தின் நலனுமே முதன்மை' என்ற கட்டுப்பாட்டை வெளிப்படுத்தியவர்.*

*தொழிலாளர் நலன் சார்ந்து, கழகத்தின் கொள்கைகளை எழுத்தின் வழியாகவும் மக்களிடம் கொண்டு சேர்த்தவர் கோபால். அதற்காக 'உழைப்பாளி' என்ற இதழையும் நடத்தி வந்தார்.*

### 'மிசா' சிறைவாசம்

*1976-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலைக் காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டபோது, காட்டூர் கோபாலும் 'மிசா' சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டார். கழக முன்னோடிகளான முரசொலி மாறன், ஆற்காடு வீராசாமி, சிட்டிபாபு, இன்றைய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்களுடன் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். ஓராண்டுக்கும் மேலான 'மிசா' சிறைவாசம் அனுபவித்தவர். 'சிம்சன் தொழிற்சங்கப் பிரச்சினை', 'சர்க்காரியா கமிஷன் விசாரணை'யிலும் இடம்பெற்றன. 1962-ஆம் ஆண்டு 'விலைவாசி உயர்வுப் போராட்டம்', 'இந்தி எதிர்ப்புப் போராட்டம்' ஆகியவற்றில் கலந்து கொண்டு அடக்குமுறைச் சட்டங்களை எதிர்கொண்டவர். கடுங்காவல் தண்டனைகளைப் பெற்றவர்.*

> **"தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக முன்னின்று, பலமுறை சிறையேகிய செம்மல்" என்ற கலைஞரின் புகழுரைக்குப் பொருத்தமான வாழ்க்கையை வாழ்ந்தவர்.**

*காட்டூர் கோபால் அவர்களின் கழகப் பணிகளையும் தொழிற்சங்கப் பணியையும் கலைஞர், 'நெஞ்சுக்கு நீதி'யில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.*

*"கொள்கைப் பிடிப்பில் குன்றா உறுதி" கொண்டிருந்த கோபால் அவர்கள், 1978-ஆம் ஆண்டு டிசம்பர் 15 அன்று, உடல்நலம் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தார். 50 வயதுகூட நிறைவடையாத நிலையில் ஏற்பட்ட அவரது மறைவு, கழகத்திற்கும் தொ.மு.ச. பேரவைக்கும் பேரிழப்பாக அமைந்தது.*

*செய்தியை அறிந்து துடித்த கலைஞர், "இனிய பண்பும் எளிய தோற்றமும், கொள்கைப் பிடிப்பில் குன்றா உறுதியும் இயக்க வளர்ச்சியிலே தீவிர ஈடுபாடும் கொண்ட கழக மறவர்" என்றும், "ஈடில்லா தொழிற்சங்கத் தலைவர்" என்றும் இரங்கல் எழுதியதுடன், அவரது படத்திறப்பில் கலந்துகொண்டு மரியாதை செய்தார்.*

*கோவைப் பஞ்சாலையில் தொடங்கிய அவரது உரிமைக்குரல், தொ.மு.ச.பேரவை மாநிலச் செயலாளராக, சிம்சன் தொழிலாளர்களின் போராட்டத்தில் முன்னின்ற கழகச் செயல்வீரராகப் பல தியாகங்களைக் கொண்டிருந்தது. "தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்காக முன்னின்று, பலமுறை சிறையேகிய செம்மல்" என்ற கலைஞரின் புகழுரைக்குப் பொருத்தமான வாழ்க்கையை வாழ்ந்தவர்.*

*1962-ஆம் ஆண்டு தேர்தலின்போது, அன்றைய கோவில்பாளையம் சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராகப் பேரறிஞர் அண்ணாவால் அறிவிக்கப்பட்டவர். அப்போது வெற்றிவாய்ப்பை இழந்திருந்தாலும், கழகத்தின் வரலாறு என்பது தேர்தல் வெற்றிகளால் மட்டும் எழுதப்பட்டது அல்ல. தேர்தல் வெற்றிகளையும் தாண்டி, பட்டித்தொட்டிகளில் கொள்கை முழக்கம் செய்தவர்கள், தொழிற்சாலைகளின் வாயில்களில் தொழிலாளர்களைத் திரட்டியவர்கள், கழகத்தின் அமைப்பை வலுப்படுத்தியவர்கள், கொள்கைக்காகச் சிறை சென்றவர்கள் என எண்ணற்ற உடன்பிறப்புகளின் உழைப்பால் உருவானது. அந்த வரலாற்றை, அண்ணா அறிவாலயத்தின் கருவூலத்தில் காட்சிப்படுத்தி இருக்கிறார், முத்தமிழறிஞர் கலைஞர்.*

*கழகத்தின் கருவூலத்தில், தொழிலாளர் இயக்கத்தின் வழியாகத் தடத்தைப் பதித்த காட்டூர் கோபால், காட்சிப்படமாக நினைவூட்டப்பட்டுக்கொண்டே இருக்கிறார்.*

**...துடிக்கும்**

---

## 'சினிமா ரீல்' ஆட்சி அம்பலமாகிறது!

தமிழ்நாட்டில், புதிய அரசு அமைந்து நான்கு மாத காலங்கள் ஆகியுள்ள நிலையில், அதன் போக்கு எவ்வளவு மோசமானதாக உள்ளது என்பதை, 'தி பிரின்ட்' ஊடகத்தில் எழுதியுள்ள கட்டுரையின்மூலம் விளக்கியுள்ளார், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும், பியூப்பிள் ஃபர்ஸ்ட் People-First அமைப்பின் தலைவருமான எம்.ஜி.தேவசகாயம்.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பழமொழிக்கு ஏற்ப, தமிழ்நாட்டின் ஆட்சி எந்தத் திசையில் செல்கிறது என்பதைத் தீர்மானிக்க, நான்கு மாதங்கள் போதுமான காலமாகும். பரந்தூர் விமான நிலையத் திட்டம் ரத்துசெய்யப்பட்ட சில நாட்களிலேயே, தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா, கையகப்படுத்தப்பட்ட நிலத்தைத் தொழில் துறை அல்லது பிற பயன்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கான வழிகளை, அரசு ஆராய்ந்து வருவதாக சட்டப்பேரவையில் அறிவித்தார்.

'விவசாயத்தைக் காக்க, விமான நிலையம் அமைக்கப்படாது' என்றவர்கள், திட்டம் ரத்துசெய்யப்பட்ட பின், அந்த நிலத்தை விவசாயிகளிடம் ஏன் ஒப்படைக்கவில்லை? விவசாயிகள் விவகாரத்தில் எடுத்த நிலைப்பாட்டுக்கு முரணாக, மீனவர் குடியிருப்பை ஒட்டி, தலைமைச் செயலகம் கட்ட முயல்கிறார். ஜோதிடரின் அறிவுரைப்படியும், வீட்டுக்கு அருகிலேயே தலைமைச் செயலகம் இருக்கும் வகையிலும், இதைச் செய்கிறார்கள் என்கிறார்கள்.

தற்போதைய தமிழ்நாடானது.. நிர்வாக அனுபவம், அரசியல் அனுபவம் அல்லது தலைமைத்துவ அனுபவம் இல்லாத ஒரு புதிய அமைப்பு. 'சினிமா நாடகங்கள்', 'பிரச்சார ரீல்கள்' மற்றும் சமூக ஊடகத் தளங்களின் மிகப்பெரிய பயன்பாட்டின்மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. அதன் தலைவருக்கு, ஆளுகை குறித்த அறிவு இல்லை. நடிகரை மையமாகக் கொண்ட ஒரு 'கல்ட்' (Cult) அமைப்பால், இந்த ஆட்சி உருவானது. அதைத்தான் ஜோசப் விஜய் செய்துவருகிறார் என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்




அ.மு.ரமீஸ்

### அப்பாவின் வழியில், கழகப் பணி!

1998-ஆம் ஆண்டு, ஆலந்தூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த என் தந்தை இ.மு.அக்பர் அவர்கள், இளைஞர் அணி நிர்வாகிகளுடன் சென்று, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களை நேரில் சந்தித்துப் புகைப்படம் எடுத்து, வாழ்த்துப் பெற்றுள்ளார். அவரது வழியில், என்றும் மாறாத கழக உணர்வுடன் பயணிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**- அ.மு.ரமீஸ், பகுதி ஒருங்கிணைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி, சேப்பாக்கம் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## நம் வாழ்வு / நல்வரு (கருவூலம்)

### ஜனநாயகத்தை உருவாக்குவது சுலபமல்ல!

1967-ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையில், இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது எளிதான காரியம் அல்ல என்பதை விளக்கங்களுடன், அண்ணா உவமையைப் பயன்படுத்தினார். "நமது நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபிப்பது மிகவும் கடினமான வேலை; அது இரும்பை உருக்கி வார்த்து, புதிய வடிவம் உருவாக்கும் கடினமான பணியைப் போன்றது. பிளாஸ்டிக்கில் சாமான்கள் செய்வதைப் போன்று சுலபமானதல்ல!" என்று கூறினார். "ஜனநாயகத்தை உருவாக்குவதும் அதைச் சேதமுறாமல் பாதுகாப்பதும் தலைமுறைகள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய கடமை" என்பதே அண்ணா ஆற்றிய பேருரையின் சாரம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900